செ.வெ.எண்: 44 நாள்: 21.07.2021

கரூர் மாவட்டம்

**<u>கரூர் நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் காமராஜர் மார்க்கெட்டில் குளிர்சாதன கிடங்கு வசதியுடன் புதிய காய்கறி வணிகவளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் – மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. V செந்தில்பாலாஜி அவர்கள் உறுதி</u>**

அதன் விபரம் வருமாறு:

மாண்புமிகு மின்சாரம்,மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. V செந்தில்பாலாஜி அவர்கள் கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள காமராஜர் மார்க்கெட் பகுதியில் குளிர்சாதனக்கிடங்கு வசதியுடன்கூடிய புதிய காய்கறி வணிக வளாகம் அமைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்களுடன் இன்று (21.07.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதேபோல, புதுக்குளத்துப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள மீன்மார்கெட்டில் பழுதடைந்த கடைகளையும், சுங்ககேட் பகுதியில் புதிய இறைச்சிக்கூடம் அமைப்பதற்கான இடம் தொடர்பாகவும் மாண்புமிகு மின்சாரம்,மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

பின்னர் மாண்புமிகு மின்சாரம்,மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

கரூர் நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள காமராஜர் மார்க்கெட்டில் தற்போது காய்கறி கடைகள், பழக்கடைகள், மளிகைப்பொருட்கள் விற்கும்கடைகள் என 184 கடைகள் உள்ளன. இதில் பல கடைகள் பழுதடைந்த நிலையில் உள்ளது. பல ஆண்டுகளாக இயங்கிவரும் காமராஜர் மார்க்கெட் பகுதியில் காய்கறி வணிகவளாகம் கட்ட வேண்டும் என்பது கரூர் நகரப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் மக்களின் தேவைகளுக்கும், மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கும் முன்னுரிமையளிக்கப்பட்டு உடனுக்குடன் திட்டங்கள் நிறைவேற்றப்படும். அந்த வகையில் அனைத்து வணிகர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் காமராஜர் மார்க்கெட் பகுதியில் குளிர்சாதன கிடங்கு வசதியுடன் கூடிய புதிய காய்கறி வணிகவளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வணிக வளாகத்தினை ரூ.10.25கோடி மதிப்பில் கட்டுவதற்கான விரிவான திட்ட கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் சிறப்பு நிதி பெற்று விரைவில் புதிய குளிர்சாதன கிடங்கு வசதியுடன்கூடிய காய்கறி வணிக வளாகம் கட்டப்படும்.

அதே போல, புதுக்குளத்துப்பாளையம் பகுதியில் 36 கடைகளுடன் அமைந்துள்ள மீன்மார்க்கெட்டில் உள்ள கடைகள் பழுதடைந்துள்ளதால் அவற்றை சரி செய்து தரவேண்டும் என்று மீன்விற்பனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இன்று பழுதடைந்த நிலையில் உள்ள கடைகள் ஆய்வு செய்யப்பட்டது. விரைவில் மீன் மற்றும் இறைச்சிகளை விற்பதற்கு புதிய விற்பனைக்கூடங்கள் கட்டித்தரப்படும். அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு சிறப்பு நிதி பெறப்பட்டு பணிகளை துவங்க நடவடிக்கை எடுக்கப்படும். சுங்ககேட் பகுதியில் உள்ள சுமார்0.25ஏக்கர் பரப்பிலான இடத்தில் நவீன குளர்பதனக்கிடங்குடன் கூடிய புதிய இறைச்சிக்கூடம் அமைக்க ரூ.4.25கோடி மதிப்பில் கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது, விரைவில் புதிய இறைச்சிக்கூடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பாலகணேஷ், கரூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியன், கரூர் நகராட்சி ஆணையர் திரு.சு.இராமமூர்த்தி, நகராட்சி பொறியாளர் திரு.நக்கீரன் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.